



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12/06/2023) சர்வதேச ஸ்குவாஷ் 2023 சென்னை போட்டியை சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூ மைய வளாகத்தில் தொடங்கி வைத்தார். இந்த தொடக்கவிழாவில் உலக ஸ்குவாஷ் கூட்டமைப்பு தலைவர் ஜீனா வூல்ட்ரிட்ஜ் மற்றும் இந்திய ஸ்குவாஷ் ராக்கெட்ஸ் கூட்டமைப்பு தலைவர், அனில் வாத்வா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, அரசு கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ, மேகநாத ரெட்டி, தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் மற்றும் சாம்பியன் ஷிப் கமிட்டி சேர்மன் என். இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உற்பத்தியை உயர்த்தும் நெல் சாகுபடித் திட்டம்! முதல் பக்கத் தொடர்ச்சி

குறுவைப் பருவத்திற்கு தேவைப்படும் குறைந்த வயதுடைய நெல் ரக விதைகள், இரசாயன உரங்கள், உயிர் உரங்கள், பயிர்க்கடன் போன்ற இடுபொருட்களும் டெல்டா மாவட்ட உழவர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்பட்டன.

இதன் விளைவாக கடந்த ஆண்டில் குறுவை நெல் சாகுபடி கடந்த 48 ஆண்டுகளில் இல்லாத மிகப் பெரிய சாதனையாக, 5.36 இலட்சம் ஏக்கரை கடந்து, 12.76 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்து, சாதனை படைத்தது.

நடப்பு ஆண்டில் கோடை பருவத்தில் பெய்த மழையினால், டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர் கணிசமாக உயர்ந்தது. மேலும், சென்ற ஆண்டில் மேட்டூர் அணை நீரை மிகவும் கவனமாக பயன்படுத்தியதன் காரணமாக, மேட்டூர் அணையின் நீர் இருப்பு தற்போது 103.35 அடியாக உள்ளது. எனவே மேட்டூர் அணையினை குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12ஆம் நாளன்று திறப்பதற்கு நமது அரசு முடிவெடுத்தது.

நீர்வளத்துறை கடந்த இரண்டு ஆண்டுகளைப் போலவே, டெல்டா பகுதிகளில் கால்வாய்களை தூர் வாரும் பணிகளை மேற்கோண்டது. இதற்கென நடப்பாண்டில் 90 கோடி ரூபாயை அரசு அனுமதித்து, இந்தப் பணி களை ஆய்வு செய்து விரைவாக முடிப்பதற்கு கண்காணிப்பு அலுவலர்களும் நியமிக்கப்பட்டு, முடுக்கிவிடப்பட்டதால், இந்தப் பணிகள் எல்லாம் தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளன.

இந்தப் பணியின் முன்னேற்றத்தினை நேரடியாக பார்ப்பதற்காக சில நாட்களுக்கு முன்பு நானும், நம்முடைய நீர்வளத்துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களும், இன்னும் சில அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் தஞ்சாவூருக்கு நேரில் சென்று ஆய்வுகளை மேற்கொண்டோம். மேலும், குறுவை நெல் சாகுபடி தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து உழவர்களுடன் கலந்துரையாடி உரிய விவரங்களை கேட்டு அறிந்து கொண்டோம்.

**உரிய காலத்தில் உரம் விநியோகம்!**

முன்னதாக வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களும், கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களும், காவிரி டெல்டா மாவட்ட பகுதி உழவர்களுடன் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்தி, குறுவை நெல் சாகுபடியினை மூன்றாவது ஆண்டிலும் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு ஆணையிட்டிருந்தேன்.

அதன்படி, தற்போது குறுவை நெல் சாகுபடிக்கு தேவையான குறைந்த நாள் வயதுடைய நெல் ரக விதைகளும், இரசாயன உரங்களும், உயிர் உரங்களும் அரசு வேளாண்மை விரிவாக்கம் மையங்களிலும், தனியார் கடைகளிலும் இருப்பு வைக்கப்பட்டு, உழவர்களுக்கு உரிய காலத்தில் விநியோகிக்கப்பட்டன.

இதன் காரணமாக நிலத்தடி நீரை பயன்படுத்தி இதுவரை 1.6 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல்லில் நடவுப் பணி முடிவடைந்துள்ளது. மேலும், சமுதாய நாற்றங்கால் அமைத்து, காவிரி நதிநீர் வந்தவுடன், நடவுப்பணியினை உடனடியாக துவங்கும் வகையில் பணிகள் விரைவாக வேளாண்மைதுறையினால் முடுக்கி விடப்பட்டன. இந்நிலையில் இன்று (ஜூன் 12) மேட்டூர் அணையைத் திறந்து வைத்துள்ளேன்.

நமது அரசுப் பொறுப்பேற்று, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இன்று (12.6.2023), மேட்டூர் அணையினை உரிய காலத்திற்குள் நான் திறந்து வைப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், பாசன நீரினை டெல்டா மாவட்ட உழவர்கள் மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தி இடுபொருட்களை தேவையான அளவு உபயோகித்து, நடப்பு குறுவைப் பருவத்தில் நெல் உற்பத்தியை உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நமது உழவர்களுக்கு நடப்பாண்டில் ரூபாய் 75 கோடியே 95 லட்சம் மதிப்பீட்டில் குறுவை நெல் சாகுபடி தொகுப்பு திட்டத்தையும் இன்று நான் அறிவிக்கிறேன்.

**ரூ.75.55 கோடியில் குறுவை நெல் சாகுபடி திட்டம்!**

குறுவை சாகுபடித் தொகுப்புத் திட்டம், 2023 என்ற இந்தத் திட்டத்தின்கீழ்,

*ஏக்கருக்கு 45 கிலோ யூரியா,

*50 கிலோ டிஏபி,

*25 கிலோ பொட்டாஷ் என்ற விகிதத்தில், 2.5 இலட்சம் ஏக்கருக்குத் தேவையான இரசாயன உரங்கள் முழு மானியத்திலும்,

*1.24 இலட்சம் ஏக்கருக்குத் தேவையான நெல் விதைகள் 50 சதவிகித மானியத்திலும்,

*மாற்றுப் பயிர் சாகுபடிக்காக 15,818 ஏக்கருக்கு மாற்றுப் பயிர் சாகுபடித் தொகுப்பும்,

* 6,250 ஏக்கரில் பசுந்தாளுர விதைகளும்,

* 747 பவர் டில்லர்களும்,

*15 பவர் வீடர்களும் மானியத்தில் விநியோகம் செய்வதற்காக, மொத்தம் ரூபாய் 75 கோடியே 95 லட்சம் மதிப்பில் குறுவை சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

எனவே, இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு காவிரி டெல்டா உழவர்கள் அனைவரும் பாசன நீரை மிகவும் சிக்கன மாகப் பயன்படுத்தி, தேவையான அளவு இரசாயன உரங்களை உபயோகித்து, நெல் சாகுபடியினை மேற்கொள்ளுமாறு நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு இன்று அறிவித்த குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தினால், நடப்பாண்டில் ஐந்து இலட்சம் ஏக்கருக்கும் அதிகமாக குறுவை நெல் சாகுபடி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

உழவர்கள் மற்றும் வேளாண் தொழிலாளர் நலன் காக்க நம்முடைய அரசு எந்நாளும் தொடர்ந்து பாடுபடும் என்று மீண்டும் ஒருமுறை உங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

# 2047- ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் பொருளாதாரம்?

2047 - ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த பொருளாதார நாடாக - உலக நாடுகளுள் மூன்றாவது மிகப் பெரிய பொருளாதார நாடாக மாறிவிடும் என்று பிரதமர் மோடி அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் சி. ரங்கராஜன் அவர்களின் கருத்தோ வேறு விதமாக இருக்கிறது.

**“2047- ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த பொருளாதார நாடாக மாற வேண்டுமானால் அதிக முதலீடுகளை ஈர்த்திட வேண்டியது அவசியம்.**

**தற்பொழுது இந்தியாவில் தனிநபர் வருமானம் 2000 டாலர். தனிநபர் வருமானக் குறியீட்டில் இந்தியா 142 - ஆவது இடத்தில் இருக்கிறது.”**

**“ தனிநபர் வருமானம் 13,000 டாலராக உயர்ந்தால் மட்டுமே, இந்தியா வளர்ந்த நாடாக மாற இயலும்”**

என்று ரங்கராஜன் விளக்கி இருக்கிறார்.

அப்படியானால் இன்னும் 23 ஆண்டுகளில் தனிநபர் வருமானம் மேலும் அய்ந்தரை மடங்கு அதிகரிக்க வேண்டும்.

இந்தியா விடுதலை அடைந்து, கடந்த 77 ஆண்டுகளில் தனிநபர் வருமானமே 2000 டாலர்தான் என்பதைப் பார்க்கும்போது, அடுத்த 23 ஆண்டுகளில் - அதாவது 2047ல், இந்திய விடுதலையின் நூற்றாண்டில், - தனிநபர் வருமானம் 13,000 டாலர் என்ற மிக உயர்ந்த நிலையை அடைந்துவிட முடியுமா?

**எனவே பிரதமர் கூறிவருவது நனவாகுமா? கனவாகவே காற்றில் கரைந்து போகுமா ? நனவாகாதவற்றையே பிரதமர், நாட்டு மக்களிடம் சொல்லி வருகிறாரா? காலம்தான் சரியான பதில் சொல்ல வேண்டும் !**

நமது முதலமைச்சரின் கேள்விக்கு அமித்ஷாவின் பதில் என்ன?

# தமிழ்நாடு முதலமைச்சர் கணிப்புப்படி நாற்பதும் நமதே!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

**சென்னை,ஜூன்.13-**

**தமிழ்நாட்டில் மக்களவைத் தேர்தலில் 25 இடங்களில் வெற்றி பெறுவோம் என்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. நாற்பதும் நமதே என்கிறார் நமது முதலமைச்சர். இது பெரியார் மண் யார் வரவேண்டும் என்பதைவிட, யார் வரக்கூடாது என்பதில் தமிழ்நாட்டு மக்கள் ஆயத்தமாக உள்ளனர் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:-**

தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் அரசியல் பிரிவான பா.ஜ.க. எப்படியாவது சில நாடாளுமன்றத் தொகுதிகளையாவது கைப்பற்றி விட வேண்டும் வருகிற 2024 இல் நடைபெறும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் என்று திட்டமிட்டு, தலைகீழ் பயிற்சிகளையும், ‘அரசியல் தண்டால்களையும்’ அமித்ஷாக்கள், நட்டாக்கள், பிரதமர் மோடி முதலியவர்களும், அவரது ரத கஜ துரக பதாதிகளும் அவ்வப்பொழுது தமிழ்நாட்டிற்கு வந்து தி.மு.க.மீது அவதூறு பிரச்சாரத்தை அள்ளி வீசிவிட்டுச் செல்வதை ஒரு வேடிக்கையான அரசியல் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்!

சென்னை, வேலூருக்கு நேற்று (11.6.2023) வந்து சென்ற (நம்பர் 2 வித்தை வித்தகரான) உள்துறை அமைச்சர் அமித்ஷா, 25 நாடாளுமன்றத் தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றி பெற வியூகம் வகுத்துப் பேசி திரும்பியுள்ளார்!

தென்சென்னை, வேலூர், குமரி, ஈரோடு, கோவை, இராமநாதபுரம், திருப்பூர் போன்ற பல நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறி வைத்து அங்கு ‘சகலவித வித்தைகளிலும்’ ஈடுபட முடிவெடுத்துள்ளனர்!

அ.தி.மு.க.வினர் தங்களது ‘பல்லக்கு பவனி’க்குத் தேர்ந்தெடுப்பார்கள் எத்தனைப் பிரிவுகளும், பிளவுகளும் அவர்களுக்கு இருப்பினும், காரணம் வெளிப்படையானது ‘மடியில் கனம்’ எனவே கூட்டணியில் பயம் என்ற நிலையில், அரசியல் கூட்டணி அடிமை ஒப்பந்தம் மீண்டும் மீண்டும் அவ்வப்போது அவர்களிடையே ஒவ்வொரு தேர்தலின்போதும் புதுப்பிக்கப்பட்டே வருவது கண்கூடு!

தெருக்கூத்தில் ராஜா வேஷம் கட்டுகிறவர்கள்; “ஊருக்கே உண்மை ராஜா தாம்தான்” என்று நினைத்துப் பேசினால், மக்கள் அத்தகையவர்களை எப்படி நோக்குவார்கள்?

அப்படித்தான் தமிழ்நாட்டு மக்கள் ‘மோடி வித்தை’க்காரர்களையும் பார்த்து ஒரு கேலிச் சிரிப்புடன் நகருகின்றனர்!

**கூட்டணி வேறு – கூத்தணி வேறு!**

‘நாற்பதும் நமதே!’ என்று முழங்குகிறார் ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கலைஞர் நூற்றாண்டு விழாவில் கூட்டணித் தலைவர்களோடு இணைந்து அவர்களது கோர்த்த கைகளுடன் கொண்டுள்ள பலமான கொள்கை உறவு பலத்துடன்!

அது போன்று இன்று தமிழ்நாட்டில் உள்ள பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். கூத்தணியினர் கூற முடியாததால்தான் 25 இடங்களைப் பிடிக்கவேண்டும் என்று அமித்ஷா பேசுகிறார்.

15 இடங்களை ‘பெரிய மனதுடன்’ மற்ற அ.தி.மு.க. போன்ற கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்துள்ளார்!

இதற்கிடையில், ‘கருநாடகா வெற்றி வீரரான’ தமிழ்நாட்டு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, இப்போதே வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று பகிரங்கமாய்



அறிவித்துவிட்டார்! (அப்புறம் எப்படி ‘அரசியல் பல்டி அடிப்பாரோ’ என்பதும் யாருக்கும் தெரியாது).

தமிழ்நாட்டில் என்னென்ன புதிய திட்டங்களை பா.ஜ.க. அரசு தந்தது என்று சேலத்தில் கலைஞர் சிலை திறப்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்ட கேள்விக்கு இதோ நாங்கள் தந்த அடுக்கடுக்கான திட்டம் என்று பதில் கூறினார்களா? கூறுவார்களா? ஒன்றிய அரசின் மானிய வழங்கலைக் காட்டினால் போதுமா?

1. பல ஆண்டுகளுக்குமுன் பிரதமர் மோடியால் அடிக்கல் நாட்டப் பெற்ற மதுரை எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டனவா? அந்த மருத்துவக் கல்லூரி அங்கே அதில் இயங்குகிறதா? பதில் தருவார்களா?

2. சுமார் 1,800 கோடி ரூபாய் செலவில் தொடங்கி, தி.மு.க. அய்க்கிய முன்னணி அரசால் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 12 கிலோ மீட்டர் தூரமே பணிகள் இன்னும் மீதமுள்ள நிலையில், உச்சநீதிமன்றத்தில் (மூன்று பார்ப்பனர்கள் திட்டமிட்டு அத்திட்டம் தொடங்கி நடந்தால், அது தி.மு.க.விற்கு, அதன் கூட்டணி கட்சிகளுக்குக் குறிப்பாக காங்கிரசுக்குப் பெருமை ஏற்பட்டுவிடும் என்பதற்காக) தடையாணை பெற்று நிறுத்திய நிலை இன்று உண்மைகள் இராமர் பாலம் இருந்தது என்பதற்கு ஆதாரம் இல்லை என்று மோடி அரசின் மூத்த அமைச்சர் ஜிதேந்திர சிங் பதில் (நாடாளுமன்றத்தில்) மூலம் வெளியாகி, பொய்த் திரையை அவர்களே கிழித்து விட்டதற்குப் பிறகாவது, முன்பு அமைச்சர் நிதின் கட்காரி மக்களவையில் கொடுத்த உறுதிமொழி, “சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தை மீண்டும் எடுத்து செயல்படுத்த முனைவோம்” என்ற வாக்குறுதி நடைமுறைக்கு வந்ததா?

அவ்வளவு தூரம் ஏன்?

செங்கற்பட்டு அருகில் ஒன்றிய அரசின் பல கோடி ரூபாய் செலவில் திட்டமிட்டு, நடத்தி மூடிய மருந்தியல் தொழிற்கூடத்தை கரோனா தொற்று காலகட்டத்தில் இரண்டு ஆண்டுகளுக்குமுன் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகம் மூலம் (ஆக்சிஜன் சிலிண்டர் தயாரிப்பு) நடத்திட மாநில அரசு வைத்த கோரிக்கை இன்னமும் கிடப்பில்தானே போடப்பட்டுள்ளது?

வெறும் வக்கணை வாய் ஜாலப் பேச்சு வித்தைக்கு மட்டும் பஞ்சமில்லை.

**இது பெரியார் மண் நினைவிருக்கட்டும்!**

தமிழ்நாட்டு மக்கள் வாயில் வடை சுட்டு விருந்தளிக்கும் இந்தக் காவிகளின் முகத்திரையைக் கழற்றி விட்டு கட்டிய டெபாசிட் டைக்கூட திரும்பப் பெற முடியாமல் தோல்வியைத் தரப் போவது உறுதி!

கருநாடகத்தில் செலவழித்ததைப்போல, பல மடங்கு செலவழித்தாலும், தமிழ் மண் ஒருபோதும் காவி மண்ணாகாது! இது சர்வமும் அறிந்த பெரியாரின் பகுத்தறிவு மண்

புரிந்துகொள்வீர், வீண் கனவு காண வேண்டாம்!

25 இடங்கள் பிடிப்பது அப்புறம் இருக்கட்டும்; ஒரே ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் தனியே நின்று, பா.ஜ.க. அதன் பலத்தைக் காட்டிய பிறகு, அரசியல் முண்டா தட்டிக் காட்டட்டுமே!

இந்தியாவின் இதர மாநில வெற்றிகள் உள்பட இதுவரை நடந்து வெற்றி பெற்று ஆட்சி அமைத்த தேர்தல்களில் வாக்களித்தவர்கள் 40 சதவிகிதம் எதிராக வாக்களித்தவர்கள் 60 சதவிகிதம். அப்படியென்றால், அவர்களுக்கு வாக்களிக்காதவர்கள் தானே அதிகம்! வெற்றி பெற்றவர்களை விலைக்கு வாங்கும் அரசியல்தான்!

யார் வரக்கூடாது என்பதில் தமிழ்நாடு ஆயத்தமாகவே உள்ளது!

எனவே, ‘வித்தைகள்’மூலம் முன்பு வெற்றியைப் பெற்றார்கள். இப்போது அந்த வித்தைகள் செல்லாது இன்றைய 2,000 ரூபாய் நோட்டுகள்போல என்ற உண்மை, வெளியாவது உறுதி!

யார் வரக்கூடாது என்பதில் தமிழ்நாடு ஆயத்தமாகி நிற்கிறது!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி - 2023!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன்.13-

சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023 சென்னை தொடக்கவிழா நேற்று (12/06/2023) எக்ஸ்பிரஸ் அவென்யூ மைய வளாகத்தில் நடைபெற்றது. இந்த சர்வதேச ஸ்குவாஷ் போட்டியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும் போது :

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் நல் ஆதரவுடன் இந்த உலக கோப்பை ஸ்குவாஷ் போட்டி சென்னையில் சிறப்புடன் நடைபெறுகிறது. இந்தப் போட்டியானது 12 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில் நடத்தப்படுவது சிறப்புக்குரியது. இந்த போட்டியை சிறப்பாக நடத்துவதற்கு அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். 2023 ஸ்குவாஷ் உலகக் கோப்பையில் போட்டியை நடத்தும் இந்தியாவுடன் ஹாங்காங், சீனா, ஜப்பான், மலேசியா, எகிப்து, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் கொலம்பியா ஆகிய எட்டு நாடுகளை சேர்ந்த தலைசிறந்த ஸ்குவாஷ் வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்த போட்டியில் பல்வேறு நாடுகளிலிருந்து வந்துள்ள வீரர்கள் அனைவரையும் வரவேற்பதிலும், சர்வதேச ஸ்குவாஷ் போட்டியை தொடங்கி வைப்பதிலும் மகிழ்ச்சியடைகிறேன் எனக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் போட்டியில் பங்கேற்கின்ற வீரர்களின் அணிவகுப்பினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் வயலின் இசை மற்றும் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த தொடக்கவிழாவில் உலக ஸ்குவாஷ் கூட்டமைப்பு தலைவர் ஜீனா வூல்ட்ரிட்ஜ் மற்றும் இந்திய ஸ்குவாஷ் ராக்கெட்ஸ் கூட்டமைப்பு தலைவர், அனில் வாத்வா ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, அரசு கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ,மேகநாத ரெட்டி, தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் மற்றும் சாம்பியன் ஷிப் கமிட்டி சேர்மன் என். இராமச்சந்திரன் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு துவக்க விழா செம்மொழி மகுடம் திராவிட சிகரம் என்னும் தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்ட கழக அயலக அணி சார்பில் மாநிலத் துணைச் செயலாளர் 99 வார்டு உறுப்பினர் பரிதிஇளம்சுருதி தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் தந்தை பெரியார் திடலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் மற்றும் சொல்வேந்தர் சுகிசிவம் ஆகியோர் உரையாற்றினர். கழக அயலக அணி மாநில தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், கவிஞர் காசி முத்துமாணிக்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன், மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், மாவட்டத் துணைச் செயலாளர் புனிதவதி எத்திராசன், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு, எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர் கலந்து கொண்டனர். இறுதியாக 58வது வட்ட செயலாளர் வி.விஜயகுமார் நன்றி கூறினார்.